**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 28.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 83/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-6 |
| **சாட்சியின் பெயர்** | : | ராஜேந்திரன் |
| **தந்தை பெயர்** | : | வைத்தியலிங்கம் |
| **கிராமம்** | : | சிதம்பரகோட்டகம் |
| **தாலுக்கா** | : | திருத்துறைப்பூண்டி |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 50 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியல் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவன். அ.சா-1 மாதரசனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் அம்பளக்காரர் சாதியை

சேர்ந்தவர்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 29.10.2010 ஆம் தேதி சுமார் 3.00 மணி அளவில் அ.சா-1க்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு 5வது எதிரி விக்னேஷ் என்பவர் அங்கிருந்த வாழ்ந்து காட்டுவோம் என்ற பிளக்ஸ் போர்டை பள்ள பய ராஜேந்திரன் பிளக்ஸ் போர்டை இங்கு எதற்கு வைத்திருக்கிறான் என்று கிழித்து எரிந்தாகவும், அங்கு சென்ற மாதரசனும், கவியரசனும் எங்களை வரசொல்லிவிட்டு என் சாதியை சொல்லி அசிங்கமாக பேசுறீங்க என்று கேட்டதால் வாய் தகராறு ஏற்பட்டு 3வது எதிரி சசிகுமார், 4ம் எதிரி கார்த்தி, ஐயப்பன், 5வது எதிரி விக்னேஷ் ஆகியோர் சேர்ந்து மாதரசனையும், கவியரசனையும் அடித்ததாகவும் அங்கு உள்ளவர்கள் மத்தியஸ்தம் செய்து திரும்பி வந்து விட்டார் என்றும், அன்று மாலை 4.00 மணிக்கு அங்கு நின்று கொண்டிருந்த 3வது எதிரி சசிகுமார் தம்பி சுதாகர் அவரது உறவினர்கள் பள்ள பய அ.சா-1மாதரசன், அ.சா-2 கவியரசன் ஆகியோர் குச்சிகாரி மகன்களை வெளியே வரசொல்லு என்று திட்டியபோது வெளியே வந்த வளர்மதியை மூன்று பேரும் சேர்ந்து கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் வளர்மதியை அடித்தாகவும், அதை தடுக்க போன அ.சா-4 செளந்தரவேணி, அ.சா-1 மாதரசன், அ.சா-2 கவியரசன் ஆகியோர்களை அதே பீர் பாட்டிலால் அடித்தாகவும், அதை பார்த்த தெருவில் உள்ளவர்கள் ஓடி வரவே அவர்கள் வந்த பைக்கை போட்டுவிட்டு ஓடும் போது எங்கள் அத்தனை பேரையும் குத்தி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். காயத்தடன் இருந்த வளர்மதி அவரது மகள் அசா-4 செளந்தரவேணி, மகன்கள் அ.சா-1 மாதரசன், அ.சா-2 கவியரசன் ஆகியோர்கள் ஆட்டோ மூலம் மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றும், இது

சம்மந்தமாக திருத்துறைப்பூண்டி காவல் துணை கண்காணிப்பாளர்அவர்கள் தங்களை விசாரித்ததாகவும், விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.08.28 14:32:23 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.